அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் மற்றும் சேலம் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் நேற்று (15-5-2025) சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதியைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.ராமச்சந்திரன் அவர்களின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது இல்லத்திற்குச் சென்று சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர். உடன் அவரது குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம்! அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ – தி.பழநிவேலு பங்கேற்பு!

தஞ்சாவூர் மே.16.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் மண்டலச் செயலாளரும், முதன்மைச் செயலாளருமான கே.என்.நேரு கழக நிர்வாகிகளிடம் நேரில் குறைகளை கேட்டறிந்து ஆலோசணைகளை வழங்கினார்.

கழகத்தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசணையின் பேரில் மண்டலச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில் தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்டங்களை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகளை தனித்தனியாக அழைத்து அவர்களின் ஆலோசணையையும், குறைகளையும் கேட்டறிந்து குறிப்பெடுத்துக் கொண்டார்.

தஞ்சை மத்திய மாவட்ட நிர்வாகிகள் ஆலோசணைக்கூட்டம் தஞ்சை கலைஞர் அறிவாலயத்திலும், தஞ்சை தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசணைக்கூட்டம் பட்டுக்கோட்டை வசந்தம் மஹாலிலும், தஞ்சை வடக்கு மாவட்ட ஆலோசணைக் கூட்டம் கும்பகோணம் ராயா அணுகிரஹா மஹாலிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் நிர்வாகிகளிடம் அமைச்சர் கோ.என்.நேரு பேசியதாவது வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தேர்தல் வியூகம் அமைத்து செயல்படுவது கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டு செல்வது தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க நம் தலைவர் அவர்கள் மேற்கொண்டு வரும் சட்டப் போராட்டங்களை பொதுமக்களிடத்தில் விளக்கிக் கூறுவது, மேலும் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை மீண்டும் ஆட்சியில் அமரவைத்து, திமுக ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க அயராது பாடுபடுவோம் என ஆலோசணை வழங்கினார்.

இந்த ஆலோசணைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தி.பழநிவேலு. கழக உயர்நிலைச் செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மு.சண்முகம் எம்.பி, முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், தொகுதி பார்வையாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் பங்கேற்றனர்.

நேற்று (14.5.2025) முதற்கட்டமாக சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 15 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு (Junior Assistant cum Typist) பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ. சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அயாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு

புதிதாக தேர்வு செய்யப்பட்ட 15 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, மே 16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (14.5.2025) முதற்கட்டமாக சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தலைவருமான பி.கே.சேகர்பாபு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 15 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு (Junior Assistant cum Typist) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

2025ஆம் ஆண்டிற்கான பல்வேறு பதவிகளில் உள்ள 144 காலிப்பணியிடங்களைநிரப்புவதற்கான நடவடிக்கை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு. பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பாலிடெக்னிக் நேரடி 2–ஆம் ஆண்டு சேர்க்கை:

அனைத்துப் பாடப்பிரிவினரும் சேரலாம்!

சென்னை,மே.16-

இனிமேல் பிளஸ் 2-வில் எந்த பாடப் பிரிவை எடுத்து படித்திருந்தாலும் பாலிடெக்னிக் படிப்பில் நேரடி 2-ஆம் ஆண்டு சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என்று தொழில் நுட்பக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் நேரடியாக 2-ஆம் ஆண்டு சேருவதற்கான ('லேட்ரல் என்ட்ரி' முறை) முறை உள்ளது. கணிதம், இயற்பியல் வேதியியல் உள்ளிட்ட பாடங்களுடன் பிளஸ் 2 முடித்த மாணவர்கள், 10-ஆம் வகுப்பு முடித்துவிட்டு அதன்பின் 2 ஆண்டு ஐடிஐ படித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முன்னதாக பிளஸ் 2-வில் கணித பாடத்தை பிரதானமாக எடுத்துப் படித்தவர்கள் மட்டுமே பாலிடெக்னிக் படிப்பில் நேரடி 2-ஆம் ஆண்டு வகுப்பில் சேரலாம் என்று விதி இருந்தது.

இந்த நிலையில், வணிகவியல் உள்பட அனைத்து பாடப்பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், வரும் கல்வியாண்டு முதல் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தொழில் நுட்பக் கல்வித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தொழில் நுட்பக் கல்வி இயக்கக ஆணையரின் அறிவுறுத்தலின்படி, பிளஸ் 2 தேர்வில் வணிகவியல் உள்பட அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் 2025-26-ஆம் கல்வியாண்டில், நேரடி இரண்டாம் ஆண்டு பட்டயப் படிப்பில் சேர்க்கை செய்து கொள்ள அனைத்து பல வகை தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பல்லவராயன்பேட்டையில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார் உடன் தலைமைக் கழகப் பேச்சாளர் வை.பரிதிச்செல்வன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், ஒன்றியக் கழச் செயலாளர்கள் ஞான. இமையநாதன், ப.முருகமணி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர் மற்றும் பலர் உள்ளனர்.

வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஏற்பாடு! இரா,ஆவுடையப்பன் – மு.அப்துல்வகாப் பங்கேற்பு!

இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்தில் மின்னொளி கபாடி போட்டி!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தொடங்கி வைக்கிறார்! அமைச்சர் கோவி.செழியன் சிறப்புரை!

நெல்லை, மே 16 -

முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர், திட்ட குழு தலைவர் வி.எஸ் ஆர். ஜெகதீஸ் ஏற்பாட்டில் 15 .05.2025 முதல் 18.05.2025 வரை நான்கு நாட்கள்

மேலும் நடைபெறும் விளையாட்டு போட்டி நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், கோவி.செழியன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அப்புவிளை கோவில் மைதானத்தில் அகில இந்திய அளவிலான மின்னொளி கபாடி போட்டி இன்று 15 ம் தேதி இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் தலைமையில் சித்திக்,பிரபாகர பாண்டியன்,போர்வெல் கணேசன், பரணி சங்கர், வேலங்குளம் கண்ணன், செல்வகருணாநிதி, சுடலைகண்ணு, முத்துப் பாண்டி என்ற பிரபு. முத்து கிருஷ்ணன்,இசக்கி பாண்டியன், சேதுராமலிங்கம், ராதாகிருஷ்ணன், தமிழ்வாணன், தனலட்சுமி தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலை நடைபெறுகிறது.

இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, களக்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜன்,நாங்குநேரி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஆகியோர் வரபேற்புரையாற்றுகின்றனர்.

இரண்டாம் நாள் நாளை 16 ஆம் தேதி ஆண்களுக்கான போட்டியை மீனவர் நலன் மற்றும் மீன் வளத்துறை கால்நடை துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், பெண்களுக்கான போட்டியை நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

நிகழ்வில் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன்கான், மாவட்ட அவை தலைவர் கிரகாம் பெல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மூன்றாம் நாள் 17ஆம் தேதி ஆண்களுக்கான போட்டியை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் துவக்கி வைக்கிறார் பெண்களுக்கான போட்டியை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

நான்காம் நாள் 18 ம் தேதி போட்டியை கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.

போட்டிகளுக்காண ஏற்பாடுகளை இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் செய்துள்ளார்.

போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்!

படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு - போட்டித்தேர்வுக்கான பயிற்சி!

சென்னை, மே 16-

TNPSC, SSC, IBPS, RRBஆகியமுகமைகள்நடத்தும்போட்டித்தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரியில்500 இடங்களுக்கும், சென்னை சேப்பாக்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 இடங்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது.

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தேர்வர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்குஇணையவழியாக விண்ணப்பங்கள் பெற்று,சேர்க்கை நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணிவரை ஆறுமாத காலம்வாராந்திரவேலை நாட்களில்நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் தேர்வர்கள் குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 01.01.2025 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி, போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவும் தங்கும் வசதிகளும் இல்லை.

பயிற்சியில் சேரவிரும்பும் தேர்வர்கள்www.cecc.in வாயிலாக 16.05.2025 முதல் 31.05.2025 வரை விண்ணப்பிக்கலாம். கூடுதல்விவரங்களைமேற்குறிப்பிட்ட இணையதளமுகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04425954905 மற்றும் 044 28510537 ஆகிய தொலைபேசிஎண்களைத்தொடர்புகொள்ளலாம்.

பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப தேர்வர்கள் தெரிவு செய்யப்பட்டு தேர்வர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும், ஜூன் மாதம் முதல் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு எனும் திராவிட மாடல் அரசின் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், தென்கீரனூர் ஊராட்சி, கலைஞர் திடலில் தெற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த மாபெரும் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர், தமிழ்நாடு தோல் உற்பத்தி தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் சிறுவானூர் பரசுராமன், இளம் பேச்சாளர் ஐஸ்வர்யா ஆகியோர்கள், கலந்து கொண்டு, திராவிட மாடல் அரசின் சிறப்பு திட்டங்கள் மற்றும் நான்காண்டு கால மக்கள் நலத்திட்டங்கள் குறித்த சாதனைகளை எடுத்துரைத்தனர். மேலும் இந்த மாபெரும் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில், மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.